(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 1(7).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2019 பெப்ரவரி 01 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2019 பெப்ரவரி 20 புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— பாராளுமன்றத்தில் ஆகக்கூடுதலான ஆசனங்களைப் பெற்றுள்ள ஐக்கிய தேசியக் கட்சியினால் தேசிய அரசாங்கமொன்று நிறுவப்பட்டுள்ளதால், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 46(4) உறுப்புரையின் பிரகாரம் அமைச்சரவை அமைச்சர்களினது எண்ணிக்கை 48 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும், அமைச்சரவை உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்களினதும் பிரதி அமைச்சர்களினதும் எண்ணிக்கை 45 ஐ விட விஞ்சாதவாறு இருத்தல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

*

பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி, தொழிற் பயிற்சி, திறன்கள் அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— அரசியலமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தத்தினூடாக திருத்தப்பட்டவாறான இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 156(3) மற்றும் 1981 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் பிரிவு 3(4) ஆகியவற்றின் பிரகாரம் நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்ஸ்மன்) சம்பளம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படல் வேண்டுமென்பதாலும்;

அதற்கமைய, 2018.06.01 ஆம் திகதி முதல் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்ஸ்மன்) மாதச் சம்பளத்தை ரூ. 135,000.00 ஆகவும், மாதாந்த தொலைபேசிக் கொடுப்பனவை ரூ.10,000.00 ஆகவும் மற்றும் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவை 225 லீட்டர் ஆகவும் திருத்தியமைப்பதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளதாலும்;

அதற்கிணங்க, அரசியலமைப்பின் 156(3) ஆவது உறுப்புரை மற்றும் 1981 இன் 17 ஆம் இலக்க நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் சட்டத்தின் பிரிவு 3(4) என்பவற்றுக்கிணங்க மேலே குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரின் (ஒம்புட்ஸ்மன்) மாதச் சம்பளம் மற்றும் படிகள் திருத்தியமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.